**ஜனவரி – 24**

# தமிழ்நாடு செய்திகள்

## புதிய நெல் வகை

- ஆடுதுறையில் உள்ள தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிறுவனமானது (The Tamil Nadu Rice Research Institute - TRRI) குறுகிய காலத்தில் வளர்ச்சியடையக் கூடிய ADT 53 என்ற நெல் வகையை அறிமுகப்படுத்தியுள்ளது.
- இந்த குறுகிய கால நெல் வகையின் முதிர்வுக் காலம் 105 முதல் 110 நாட்கள் ஆகும்.
- ADT-53 என்ற இந்த புதிய வகையானது விளைச்சல் மற்றும் தரம் ஆகியவற்றில் ADT-43 வகையை விட மேலோங்கி இருப்பதால் விவசாயிகளுக்கு இது ஒரு வரம் போன்றதாகும்.
- இந்த புதிய நெல் வகையானது,
    - டெல்டா மாவட்டங்களின் குறுவை அல்லது கோடைக் காலங்கள்
    - இதர மாவட்டங்களின் சொர்ணவாரி அல்லது நவராய் காலங்கள்

  ஆகிய காலங்களில் விவசாயிகளுக்குப் பொருந்துவதாக அமையும்.
- இது 62 சதவிகிதம் அரைபடும் திறனையும் 65 சதவிகிதம் முழு அரிசித் திறனையும் கொண்டுள்ளது.
- மேலும் இது துத்தநாகம் மற்றும் இரும்பு ஆகியவற்றை அதிகம் கொண்டுள்ளது.
- ADT – 53 வகையானது ADT - 43 / JGL – 384 ஆகியவற்றின் கலப்பு வகை ஆகும்.

# தேசியச் செய்திகள்

## மருந்துகளின் விலை நிர்ணயத்தை கண்காணிப்பதற்கான குழு – நிதி ஆயோக்

- மருந்துகளின் விலை நிர்ணயம் குறித்து கண்காணிப்பதற்காக நிதி ஆயோக்கின் தலைமையில் ஒரு நிலைக் குழுவை மத்திய அரசாங்கம் அமைத்துள்ளது.
- நாட்டிலுள்ள மருந்துகளின் விலைகளை ஒழுங்குபடுத்தும் நடவடிக்கைகளை இது மேற்கொண்டால் தேசிய மருந்துப் பொருட்கள் விலை நிர்ணய ஆணையத்தின் (National Pharmaceuticals Pricing Authority - NPPA) அதிகாரங்கள் பறிக்கப்படும் நகர்வாக இது இருக்கும் என்று அறியப்படுகிறது.
- மலிவு விலையிலான மருந்துகள் மற்றும் சுகாதார சேவைகள் மீதான நிலைக் குழுவானது நிதி ஆயோக் உறுப்பினர் (சுகாதாரம்) தலைமையில் செயல்படும்.
- மருந்துகளின் விலை மற்றும் சுகாதார சேவைகள் குறித்து NPPAக்கு பரிந்துரைக்கும் அமைப்பாக இக்குழு செயல்படும்.
- இக்குழு தானாகவோ அல்லது மருத்துவத் துறை, NPPA அல்லது சுகாதாரத்துறை ஆகியவற்றின் பரிந்துரைகளினாலோ பிரச்சனைகள் குறித்து ஆய்வு செய்யும்.
- NPPA ஆனது தன்னாட்சி உடைய ஒழுங்குமுறை அமைப்பாக 1997 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டது.

- சுகாதார அமைச்சகத்தினால் தயாரிக்கப்பட்ட தேசிய இன்றியமையாத மருந்துப் பொருட்கள் பட்டியலில் (National List of Essential Medicines - NLEM) உள்ள மருந்துகள் மற்றும் சேவைகள் ஆகியவற்றின் விலையை நிர்ணயம் செய்வது, அவற்றை மேற்பார்வையிடுவது மற்றும் விலை வரம்பை நிர்ணயம் செய்வது ஆகியவை இதன் நோக்கங்களாகும்.

## 2019 ஆம் ஆண்டின் இந்திய எஃகு கண்காட்சி மற்றும் கருத்தரங்கு

- எஃகு தொழிற்துறையின் 4-வது சர்வதேச கண்காட்சி மற்றும் கருத்தரங்கான 2019 ஆம் ஆண்டின் எஃகு கண்காட்சி மற்றும் கருத்தரங்கு மும்பையின் கோரிகோனில் உள்ள NSE வளாகத்தில் நடைபெற்றது.
- இந்திய வர்த்தகம் மற்றும் தொழிலக சபையின் கூட்டமைப்புடன் இணைந்து (Federation of Indian Chamber of Commerce and Industry - FICCI) மத்திய எஃகுத் துறை அமைச்சகத்தினால் இது நடத்தப்பட்டது.
- இந்நிகழ்வின் கருத்துருவானது, "எஃகின் தேவை மற்றும் விநியோகத்தின் சமமான வளர்ச்சி: புதிய இந்தியாவைக் கட்டமைத்தல்" என்பதாகும்.
- இந்திய எஃகு - 2019 என்பது உலகளவில் எஃகு தொழிலகத்தில் போட்டியை மேம்படுத்துவதற்காக 2017 ஆம் ஆண்டின் தேசிய எஃகு கொள்கை முன்னெடுப்புகளின் வரிசையில் அமைந்த ஒரு பகுதியாகும்.
    - தேசிய எஃகுக் கொள்கை 2017 ஆனது 2030-31 ஆம் ஆண்டில் எஃகு உற்பத்தியானது 300 மில்லியன் டன்களை அடைய எண்ணுகின்றது.




# சர்வதேசச் செய்திகள்

## ஈரான் செயற்கைக்கோள் - தோல்வி

- ஜனவரி 15 ஆம் தேதி சபிர் என்ற செயற்கைக் கோள் ஏவு வாகனத்தின் மூலம் "பயம்" என்று பெயரிடப்பட்ட செயற்கைக்கோளை ஈரான் ஏவியுள்ளது. ஆனால் புவியின் சுற்றுவட்டப் பாதையில் நிலைநிறுத்தும் முயற்சியின் நான்காவது நிலையில் இந்த செயற்கைக் கோள் தோல்வியடைந்தது.
- ஈரானின் இந்த நடவடிக்கையானது ஐ.நா. பாதுகாப்பு சபையின் தீர்மானம் 2231-ஐ

மீறி விட்டதாக அமெரிக்கா குற்றம் சாட்டியுள்ளது.

- விண்வெளித் திட்டம் என்பது அணு ஆயுதப் போர் ஏவுகணைகளை வழங்கும் திறன் கொண்ட, அதிக தொலைவு சென்று தாக்கும் கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணை வளர்ச்சிக்கான உள்ளடக்கம் என்று அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் ஆகியன கூறியுள்ளது.
- மேலும் ஈரான் மற்றொரு தாழ்மட்ட புவி சுற்றுவட்டப்பாதை செயற்கைக் கோளான தோஸ்தியை (நண்பர்) விண்வெளிக்கு அனுப்பத் திட்டமிட்டுள்ளது.
- ஈரானின் சுற்றுச்சூழல் மாற்றம் குறித்த தகவல்களை சேகரிப்பதற்காக பயம் (பாரசீக மொழியில் தகவல் என்று பொருள்) மற்றும் தோஸ்தி ஆகிய இரு செயற்கைக் கோள்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன.

# பொருளாதாரச் செய்திகள்

## இந்தியத் தரமிடல் அறிக்கை

- இந்தியத் தரமிடல் நிறுவனத்தால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையின்படி, 2020 ஆம் நிதியாண்டில் இந்தியாவின் நிதிப் பற்றாக்குறை 3.2 சதவிதம் அளவிற்கு அதிகரிக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது.




- வருகின்ற பொதுத் தேர்தலுக்கு முன்பாக அரசாங்கத்தால் அறிவிக்கப்படும் விவசாயக் கடன் தள்ளுபடி மற்றும் இதர நிதி ஆதாரத் திட்டங்கள் போன்ற திட்டங்களால் இந்த நிதிப் பற்றாக்குறை ஏற்படும்.
- 2020 ஆம் நிதி ஆண்டில் கடன்கள் அதிகரிக்க வாய்ப்புள்ளதைக் கண்டிடும் வகையில் மத்தியப் பிரதேசம், தமிழ்நாடு மற்றும் கேரளா ஆகிய மாநிலங்கள் மிகுந்த பாதிப்பிற்குள்ளாகும் .
- ஈட்டுகின்ற வருவாயைக் காட்டிலும் செலவிடப்படும் செலவினங்களின் வளர்ச்சி அதிகரிப்பதன் காரணமாக 2020 ஆம் நிதியாண்டில் மாநிலத்தின் வருவாய் கணக்கில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 0.5 சதவிகிதம் அளவிற்குப் பற்றாக்குறை ஏற்படும் என்று கணக்கிடப்பட்டுள்ளது.
- 2019 ஆம் நிதி ஆண்டில் இந்திய தரமிடல் நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்ட அரையாண்டு கணக்கெடுப்பின்படி நிதிப்பற்றாக்குறை 2.8 சதவிகிதமாக இருக்கும் என்று கூறப்பட்டது.

# மாநிலச் செய்திகள்

## 2019 ஆம் ஆண்டின் குடியரசு தின அணிவகுப்பு - மேற்கு வங்காளத்தின் காட்சிப்படம்

- 2019 ஆம் ஆண்டின் குடியரசு தின அணிவகுப்பிற்காக மேற்கு வங்காள மாநிலத்தின்

அணிவகுப்புக்கான காட்சிப் படத்தின் கருத்துருவான "காந்தி – தாகூரின் ஒற்றுமையை" மத்திய அரசாங்கம் ஏற்றுக் கொண்டது.

- ❖ மேற்கு வங்க மாநிலத்தின் காட்சிப் படமானது "பெலிகாத்தாவில் சாந்தி நிகேதன் மற்றும் காந்தி" என்ற கருத்துருவுடன் காந்தி மற்றும் இரவீந்திரநாத் தாகூர் ஆகிய இரு தலைவர்கள் பற்றிய தகவல்களை வெளிப்படுத்துகிறது.
- ❖ 1915 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் ஷியாமொலி இல்லத்தில் மகாத்மா காந்தி தாகூரை சந்தித்ததன் நினைவாக இக்கருத்துருவை மேற்கு வங்க மாநில முதல்வர் வெளியிட்டார்.

*பின்னணி*

- ❖ குடியரசு தினக் கொண்டாட்டங்களுக்கான அணிவகுப்புக் காட்சிப் படத்தின் கருத்துருவை இந்திய பாதுகாப்புப் படை தேர்ந்தெடுத்தது இதுவே முதல்முறையாகும்.
- ❖ காந்தியின் 150வது பிறந்த தினத்தின் நினைவாக "காந்திஜி" என்ற கருத்துரு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

### மாநிலங்களுக்கிடையிலான முதலாவது பாலம் – ஜம்மு காஷ்மீர்

- ❖ ஜம்மு காஷ்மீர் மாநிலத்தின் கத்துவா மாவட்டத்தில் உள்ள ராவி நதிக் கரையின் மீது அமைந்துள்ள 1.2 கிலோ மீட்டர் தொலைவு கொண்ட கேடியான் – கந்தியால் பாலத்தை மத்திய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் நிதின் கட்கரி திறந்து வைத்தார்.
- ❖ மாநிலங்களுக்கிடையேயான இந்த முதலாவது பாலமானது கத்துவா மாவட்டத்தின் தொலைதூரப் பகுதி மற்றும் பஞ்சாப் ஆகியவற்றை இணைக்கிறது.

## பிரபலமானவர்கள், விருதுகள் மற்றும் நிகழ்வுகள்

### சத்ரா விஸ்வகர்மா மற்றும் சன்சத் ஆதர்ஷ் கிராம் யோஜனா விருதுகள்

- ❖ இந்தியத் துணைக் குடியரசுத் தலைவர் இரண்டாவது சத்ரா விஸ்வகர்மா விருதினை குழந்தைகள் மற்றும் அவர்களது ஆசான்களுக்கு வழங்கினார். மேலும் இவர் சன்சத் ஆதர்ஷ் கிராம் யோஜனா விருதுகளை கல்வி நிறுவனங்களுக்கு வழங்கினார்.
- ❖ புதுதில்லியில் அனைத்து இந்திய தொழில் நுட்பக் கல்விக் குழுவினால் (All India Council for Technical Education - AICTE) நடத்தப்பட்ட நிகழ்ச்சியின் போது இவ்விருதுகள் வழங்கப்பட்டன.
- ❖ 2-வது சத்ரா விஸ்வகர்மா விருதின் கருத்துருவானது, "தொழில்நுட்பத்தின் மூலம் கிராமங்களை வளர்ச்சி பெறச் செய்தல்" என்பதாகும்.
- ❖ சன்சத் ஆதர்ஷ் கிராம் யோஜனா விருதின் கருத்துருவானது, "வளர்ச்சியடைந்த கிராமங்கள் - வளர்ச்சியடைந்த தேசம்" என்பதாகும்.
- ❖ கிராமங்களில் உள்ள மக்களின் வாழ்க்கையை மேம்படுத்துவதற்காக புதிய கருத்துகளை வெளியிடும் மற்றும் கண்டுபிடிப்புகளை நிகழ்த்தும் மாணவர்களை ஊக்குவிப்பதற்காக சத்ரா விஸ்வகர்மா விருதுகள் வழங்கப்படுகின்றன.

- சன்சத் ஆதர்ஷ் கிராம் யோஜனா விருதின் கீழ் இராஜஸ்தானின் உதய்ப்பூரில் உள்ள தொழில்நுட்ப மற்றும் பொறியியல் கல்லூரி முதல் பரிசினைப் பெற்றுள்ளது.

| Category | Winner |
|---|---|
| Educational skill initiative and startups | Gokaraju Rangaraju Institute of Engineering and Technology, Telangana |
| Any other rural appropriate technologies | Army Institute of Technology, Maharashtra |
| Rural Craft and Livelihood, Rural infrastructure, tourism | Shri Venkateshwara College of Engineering, Andhra Pradesh |
| Agriculture and food | Sri Krishna College of Technology, Tamil Nadu |
| water and irrigation | Aditya Engineering College, Andhra Pradesh |

# விளையாட்டுச் செய்திகள்

## தேசிய டேபிள் டென்னிஸ் சாம்பியன் 2018

- ஒடிசாவின் கட்டாக்கில் 2018 ஆம் ஆண்டின் மூத்தோருக்கான தேசிய டேபிள் டென்னிஸ் சாம்பியன்ஷிப் போட்டி சமீபத்தில் நடத்தப் பட்டது.




- 80வது தேசிய டேபிள் டென்னிஸ் சாம்பியன்ஷிப் போட்டியின் இறுதிப் போட்டியில் தமிழ்நாட்டைச் சேர்ந்த G. சத்தியனை வீழ்த்தி அகந்தா சரத் கமல் (தமிழ்நாடு) வரலாறு படைத்துள்ளார். இவர் 9வது முறையாக இப்பட்டத்தை வென்றுள்ளார்.
- தேசிய டேபிள் டென்னிஸ் சாம்பியன்ஷிப்பில் 8 முறை வென்ற கமலேஷ் மேத்தாவின் நீண்ட கால சாதனையை சரத் முறியடித்தார்.
- கர்நாடகாவைச் சேர்ந்த அர்ச்சனா காமத் (18) மேற்கு வங்கத்தைச் சேர்ந்த கிருத்விகா சிங் ராயை வீழ்த்தி மூத்தோருக்கான ஒற்றையர் பிரிவில் தனது முதலாவது தேசிய பட்டத்தை வென்றுள்ளார்.
- இதன்மூலம், 5 முறை தேசிய சாம்பியன் பட்டம் வென்ற கர்நாடகாவைச் சேர்ந்த உஷா சுந்தர் ராஜ் என்பவருக்குப் பின்பு இப்பட்டத்தை வென்ற 2வது கர்நாடக வீராங்கனையாக அர்ச்சனா உருவெடுத்துள்ளார்.

# முக்கிய தினங்கள்

## தேசிய பெண் குழந்தைகள் தினம் - ஜனவரி 24

- பெண் குழந்தைகளின் மேம்பாட்டினை ஊக்குவிப்பதற்காகவும் குழந்தைப் பாலின விகித நிலைகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காகவும் இந்தியாவில் ஜனவரி 24 ஆம் தேதி தேசிய பெண் குழந்தைகள் தினம் அனுசரிக்கப்படுகிறது.
- 2019 ஆம் ஆண்டின் தேசிய பெண் குழந்தைகள் தினத்தின் கருத்துருவானது, "எதிர்கால வாழ்க்கைக்காக பெண்களுக்கு அதிகாரமளித்தல்" என்பதாகும்.
- இத்தினத்தின் கடைபிடிப்பானது இந்தியாவில் குறைந்துவரும் பாலின விகிதம், பெண் சிசுக் கொலை, குழந்தைத் திருமணம், பாலின சமமின்மை, பாகுபாடு போன்ற பெண்களுக்கு ஏற்படும் முக்கியமான பிரச்சனைகளின் மீது கவனத்தை செலுத்துகிறது.
- மத்திய பெண்கள் மற்றும் குழந்தைகள் நல அமைச்சகமானது, இதே நாளில் "பேட்டி பச்சாவோ பேட்டி பதாவோ" திட்டத்தின் நினைவு தினத்தைக் கடைபிடித்தது.




- - - - - - - - - - - - - - -